## கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், ஜெயங்கொண்டம்

## அசல் வழக்கு எண்.120/2021

நாள்: 28.08.2025.

பெயர்: இருதயசாமி (வா.சா.1) த/பெ: அற்புதசாமி

சாட்சி அழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டார்

<u>பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை...</u>

1) நான் A,B என்று இரண்டு இன சொத்துக்களை சொத்து விபரத்தில் கண்டு வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் எனக்கு எழுதப்படிக்க தெரியாது. நான் தாக்கல் செய்துள்ள முதல் விசாரணை நிரூபண வாக்குமூலத்தில் உள்ள விபரம் எனக்கு தெரியும். தாவா சொத்து என்னுடைய சொத்து தான் என்பதற்கு எனது பெயரில் ஏதேனும் ஆவணம் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை, 10 ஆண்டுகளுக்கு முன்னர் வாய்மொழியாக பாகம் பிரித்துக்கொண்டோம். எனது தந்தை அற்புதசாமி தற்போது உயிருடன் உள்ளார். தாவா சொத்தானது தற்போது எனது தந்தை பெயரில் தான் உள்ளது என்றால் சரிதான். என்னுடன் பிறந்தவர்கள் என்னையும் சேர்த்து 5 பேர்கள் ஆவோம். எங்களுக்கு எவ்வளவு சொத்து பூர்வீகமாக பாத்தியம் என்றால் 10 ஏக்கர் ஆகும். எங்கள் குடும்பத்தில் 10 ஆண்டுகளுக்கு முன்னர் வாய்மொழியாக பாகம் பிரிந்துவிட்டது. பாகம் பிரிந்திருந்தாலும், இதுநாள் வரை வருவாய் ஆவணங்களில் எனது தந்தை அற்புதசாமி பெயரில் தான் உள்ளது என்றால் சரிதான். தாவா சொத்துக்கள் இதுநாள் வரை பாகம் பிரியவில்லை என்றாலும், தற்போது வரை எனது தந்தை அற்புதசாமி பெயரில் தான் உள்ளது என்றாலும், எனக்கு இந்த வழக்கை தாக்கல் செய்ய எந்தவித தகுதியும் இல்லை என்றாலும் சரியல்ல.

2) தாவா சொத்தின் சர்வே எண் என்ன என்றால் எனக்கு தெரியாது. எனது தந்தை சொத்தின் வடபுறம் பைபாஸ் சாலை உள்ளது என்றால் இல்லை. தாவா சொத்தின் வடக்கே யார் சொத்து உள்ளது என்றால் அந்தோணிசாமி சொத்து உள்ளது. தாவா சொத்தின் மேல்புறம் பிரான்சிஸ் சேவியர், மாணிக்கம் பிள்ளைக்கும் சொத்து உள்ளது என்றால் பிரான்சிஸ் சேவியர் சொத்து இருந்தது, அதனை அவர் விற்றுவிட்டார். மேற்படி பிரான்சிஸ் சேவியரிடம் கிரையம் பெற்ற உடையார்பாளையத்தை சேர்ந்தவர், சர்வே எண்.385/3B முழுவதையும் கம்பி வேலி வைத்து அடைத்து விட்டார் என்றால் சரிதான், பிரதிவாதி தடையை நீக்கிவிட்டால், அவரும் தடையை நீக்கிக்கொடுப்பதாக கூறியுள்ளார்.

நான் மேற்கூறிய உடையார்பாளையத்தை சேர்ந்த நபரை இவ்வழக்கில் பிரதிவாதியாக சேர்க்கவில்லை என்றால் சரிதான். மேற்படி அவரை இவ்வழக்கில் சேர்த்திருந்தால் உண்மை தெரிந்துவிடும் என்பதால், அவரை சேர்க்கவில்லை என்றால் சரியல்ல.

3) சர்வே எண்.385/3B க்கு வடபுறம் சாலை உள்ளது என்றால் சரிதான். மேற்படி சர்வே எண்.385/3B க்கு பாதை எது என்றால் தாவா பாதை தான், தாவா பாதையை வழியாக கண்டு தான் பிரான்சிஸ் சேவியர் உடையார்பாளையத்தாருக்கு கிரையம் கொடுத்துள்ளார். மேற்படி கிரைய ஆவணத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் எனது வழக்கறிஞரிடம் கொடுத்துள்ளேன். சர்வே எண்.385/3B மேல்புறம் சர்வே எண்.385/3A சொத்து உள்ளது. சர்வே எண்.385/3A எனது பங்காளி சூசைமுத்துவின் சொத்து. மேற்படி சூசைமுத்துவின் சொத்து பூர்வீகமானது என்றால் சரிதான். பங்காளி சூசைமுத்து அவரது நிலத்தில் முந்திரி பயிர் செய்து வருகிறார் என்றால் சரிதான். சூசைமுத்து அவரது நிலத்தில் நான்கு புறமும் வேலி வைத்து அடைத்துள்ளாரா என்றால் தெற்கில் எனது சித்தப்பா சூசைமுத்து வேலி வைத்து அடைத்துள்ளார், மேற்கில் பிரதிவாதி வேலி வைத்து அடைத்துள்ளார், கிழக்கில் உடையார்பாளையத்து நபர் வேலிவைத்து அடைத்துள்ளார். சர்வே எண்.385/3A தென்புறத்தில் முள்வேலி கதவு உள்ளது என்றால் இல்லை. சர்வே எண்.385/3A ன் வடபுறம் சர்வீஸ் ரோடு உள்ளது என்றால் இல்லை.

4) பங்காளி சூசைமுத்துவின் மேல்புறம் தான் பிரதிவாதியின் சர்வே எண்.385/1F நிலம் உள்ளது என்றால் சரிதான். பிரதிவாதியின் சர்வே எண்.385/1F மேல்புறம் அருளானந்தத்திற்கு சொந்தமான சர்வே எண்.385/1A உள்ளது என்றால் சரிதான். அருளானந்தம் நிலத்திற்கு மேல்புறம் ரோடு உள்ளது என்றால் சரிதான். அருளானந்தம் நிலத்திற்கு தென்புறம் இன்னாசி என்பவரின் சர்வே எண்.385/1B, செபஸ்தியான் என்பவரின் சர்வே எண்.385/1C, அம்ரோஸ் என்பவரின் சர்வே எண்.385/1D, அதற்கு தென்புறம் பிரதிவாதிக்கு சொந்தமான சர்வே எண்.385/1E உள்ளது என்றால் சரிதான். நான் இந்த வழக்குரையில் சர்வே எண்.385/1 என்பது ஆதியில் சர்வே எண்.186/4 என இருந்ததாக கூறியுள்ளது சம்பந்தமாக ஆவணங்கள் ஏதேனும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. பிரதிவாதி சர்வே எண்.385/1E கிரையம் பெற்ற 28.08.2002 தேதி முதலே அவரது சொத்து வழியாக பாதை பயன்படுத்துவதை தடுத்துவிட்டார் என்றால் சரியல்ல, 2021 ஆண்டில் தான் அவர் பாதையை அடைத்து

பிரச்சினை செய்தார். பிரதிவாதி கிரையம் பெற்ற தேதி முதல் அவரது கிரைய சொத்தை முழுவதுமாக அவரே அனுபவித்து வந்தார் என்றாலும், அவரது சொத்து வழியே யாரும் பாதையாக பயன்படுத்துவதை தடுத்து அனுபவித்து வந்தார் என்றாலும் சரியல்ல.

5) பிரதிவாதி கியைரம் பெற்ற சொத்திற்கு கீழ்புறமுள்ள சர்வே எண்.385/3A, சர்வே எண்.385/3B உரிமையாளரும் பாதை கேட்டு எந்த வழக்கும் தாக்கல் செய்யவில்லை, சர்வே எண்.385/3A, சர்வே எண்.385/3B நிலத்திற்கு பிறகு தான் எனது நிலம் உள்ளது என்றால் சரிதான். எங்களது பூர்வீக குடும்ப சொத்தை வடபுறம் சாலை மேம்பாட்டிற்காக கொடுத்து இழப்பிட்டை பெற்றுள்ளோம் என்றால் சரியல்ல, நாங்கள் இழப்பீடு பெற்ற இடமானது கரடிக்குளத்தில் அமைந்துள்ளது. தாவா சொத்திற்கு செல்வதற்கு வடபுறம் பாதை உள்ளது என்றால் இல்லை. வா.சா.ஆ.2 இந்த வழக்கிற்கு சம்பந்தமில்லாத ஆவணம் என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள வா.சா.ஆ.4 புலவரைபடத்தில் எவ்வித பாதையும் காட்டவில்லை என்றால் சரிதான். நான் கோரியுள்ள பாதை புழங்குரிமை பாத்திய பரிகாரம் எனக்கு கிடைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. B ஷெட்யூல் சொத்தில் எவ்வித பாதையும் இல்லை என்றாலும், அதற்குரிய எவ்வித ஆவணங்களும் இல்லாமலும், தவறான மாதிரி வரைபடத்தை தாக்கல் செய்து அதனடிப்படையில் நான் கோரும் பரிகாரம் எனக்கு கிடைக்கத்தக்கதல்ல என்றாலும் சரியல்ல. இவ்வழக்கில் சர்வே எண்.385/3A, சர்வே எண்.385/3B ஆகிய நிலங்களின் உரிமையாளர்களை சேர்க்காமல் இவ்வழக்கை தாக்கல் செய்ததால் Non joinder of necessary party என்ற தோஷத்தால் இவ்வழக்கு பாதிக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. சர்வீஸ் ரோடு போட்டதற்கு பின்பு தான் நான் வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் நான் தாக்கல் செய்வதற்கு முன்னர் தான் ரோடு போட்டுக்கொண்டிருந்தனர். தாவா சொத்திற்கு செல்ல வடபுறமும், கீழ்புறமும் பாதை உள்ளது என்பதால் எனது வழக்கு தள்ளுபடி செய்யவேண்டும் என்றால் சரியல்ல.

ஒப்பம்/ம.சி. கண்ணதாசன்/
கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி,
ஜெயங்கொண்டம்.